APRIL 2024 **71304/LA14A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு ஓரிரு சொற்களில் விடையெழுதுக.

1. முதுவேனிற் காலம் என்றால் என்ன?

2. அனைவரினது துன்பத்திற்குக் காரணம் அவரவர் தீவினைப் பயனே – என்று யார் யாரிடம் கூறினார்?

3. ஆபுத்திரன் முன் தளர்வான தடி ஊன்றிய வடிவத்தில் வந்தது யார்?

4. ஆபுத்திரன் மீண்டும் எந்த நாட்டில் எவ்வாறு பிறந்தான்?

5. சீவகசிந்தாமணி மணநூல் என்று அழைக்கப்படக் காரணம் என்ன?

6. மெய்ப்பொருள் நாயனார் – பெயர்க்காரணம் தருக.

7. கங்கைக் கரையை அடைந்த மூவர் யார் யார்?

8. சூளாமணி எந்த நூலைத் தழுவி இயற்றப்பட்டது?

9. சொல் விளக்கம் தருக: சீறாப்புராணம்

10. பெண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்களைச் சுட்டுக.

11. ஐஞ்சிறுகாப்பியங்கள் எவையெவை?

12. இயற்பியல் துறைசார்ந்த கலைச்சொற்கள் நான்கினை எழுதுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. சிலம்பு கூறும் பொழில் விளையாட்டு என்றால் என்ன? விளக்குக.

14. அறவண அடிகள் மணிமேகலையிடம் கூறியனவற்றை எடுத்துரைக்க.

15. சூளாமணியின் தூது மற்றும் கல்யாணச் சருக்கப் பாடல்களின் கருத்துக்களை எழுதுக.

16. இறைவனின் சிறப்பியல்புகளை மெய்ப்பொருள் நாயானார் எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

17. நபிகள் நாயகத்திடம் உடும்பு ஏன் பேசியது? செய்திகளைத் தருக.

18. குற்றாலக் குறவஞ்சி கூறும் மலைவளத்தைக் குறிப்பிடுக.

19. சிற்றிலக்கியம் என்றால் என்ன? உமக்குத் தெரிந்த இரண்டு சிற்றிலக்கியங்களை அறிமுகம் செய்க.



பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. பல விதமான காலங்களின் வருணனைகளை ஊர்க்காண் காதை எங்ஙனம் காட்சிப்படுத்துகிறது? விளக்குக.

21. நும்பாடப்பகுதியிலுள்ள சூளாமணிப் பாடல்களின் செய்திகளை எழுதுக.

22. இராமனைத் தன் இருப்பிடத்தில் தங்க வைக்க குகன் வேண்டுவனவற்றைக் குகப்படலம் வழிநின்று எடுத்துரைக்க.

23. வளன் சனித்தப் படலச் செய்திகளைச் சுருக்கி உரைக்க.

24. செம்மொழியான தமிழ்மொழி எனும் தலைப்பில் புதுக்கவிதையினைப் படைத்திடுக.

———————